Journal of Valartamil, eISSN 2821-3157,
Volume 2, No.2, 2021, (14-29)

# சுந்தரர் தேவாரத்தில் காணப்படும் சிவநெறி ஒழுக்கங்கள்

## The Discipline of Civaṉeri in Cuntarar Tēvāram

**Govindan Maruthai [1]**
Ph.D Scholar, Faculty of Languages and Communication,
Sultan Idris Education University, Tanjong Malim, Perak, MALAYSIA
govindanmaru@gmail.com

**Samikkanu Jabamoney Ishak Samuel [2]**
Associate Professor, Tamil Language Programme,
Sultan Idris Education University, Tanjong Malim, Perak, MALAYSIA
samjabarose@yahoo.com.my

**Published:** 08 September 2021

**To cite this article (APA):** Maruthai, G., & Ishak Samuel, S. J. (2021). சுந்தரர் தேவாரத்தில் காணப்படும் சிவநெறி ஒழுக்கங்கள். *Journal of Valartamil*, *2*(2), 14-29. https://doi.org/10.37134/jvt.vol2.2.2.2021

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol2.2.2.2021

**ஆய்வுச் சாரம்:** சுந்தரர் தேவாரத்தில் காணக்கிடக்கும் சிவநெறி ஒழுக்கங்களை அடையாளம் கண்டு கூறுவதே இவ்வாய்வுக் கட்டுரையின் முதன்மை நோக்கமாகும். இவ்வாய்வுக் கட்டுரை பண்புசார் முறையிலும் நூலாய்வு அணுகுமுறையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பகுப்பாய்வு சைவ சித்தாந்தக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. சித்தாந்தத்தின் சாதனாவியலில் கூறியவாறு, விடுதலை பெறும் பக்குவத்தில் உள்ள ஆன்மாக்கள் சீவன்முத்தர்களாய் மண்ணுலகில் சிலகாலம் இருப்பர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இந்நிலையை அடைந்த சீவன்முத்தராய் இவ்வுலகில் வலம் வந்தவர். ஆகையால், சுந்தரர் பாடிய பாடல்களில் அவர் சுட்டும் சிவநெறி ஒழுக்கங்கள் வெளிப்படுகின்றன. அவற்றைப் பகுத்தும் தொகுத்தும் எட்டுத் துணைத் தலைப்புகளில் இக்கட்டுரை அமைகிறது. சிவநெறி ஒழுக்கங்களில் முதலாவதாகக் குறிக்கப்படுவது ஞானம் பெறுதல் ஆகும். ஞானம் இருவகைகளில் பெறப்படுகின்றது. இறைவன் உள்நின்று உணர்த்துவதாலும் ஆகமநூல்களைக் கற்றறிந்து தெளிவதாலும் ஞானம் பெறலாம். இறைவனே ஞானாசிரியனாக வந்து புகட்டும் ஞானத்தைச் சீவன்முத்தர்கள் கூர்ந்து செவிமடுத்துப்பின் அதனைச் சிந்தித்து ஐயம் தெளிந்து உண்மையை உணர சிவானந்தம் அடைகின்றனர். அடுத்துக் கூறப்படுவது, அனைத்து உயிர்களிடத்தும் செலுத்த வேண்டிய அன்பு பற்றியது. இறைவனே அன்பு வடிவாய் நிற்பதால் அவ்வன்பில் தோயும் உயிராக ஆன்மா நிற்கவேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. இறைவன்பால் செலுத்தப்படும் அன்பின் செயற்பாடுகள் பத்திமையாகக் கருதப்படுகிறது. சரியை கிரியை யோகம் எனும் மார்க்கங்களின் வழி, கட்டாயக் கடமைகளாகச் சிவச்சின்னங்களை அணிந்து ஐந்தெழுத்து மந்திரத்தை

எப்போதும் உச்சரித்துத் திருமுறைகளைப் பாடி மெய்கண்ட சாத்திரங்களைச் செவிமடுத்துச் சிவபூசைகளைச் செய்து சிவனை மனமொழிமெய்களால் தியானிக்க வேண்டும். மேலும், கள்ளும் ஊனும் உண்ணாது காமம், கோபம், பொய்மை ஆகியவற்றிலிருந்து நீங்கியிருத்தல் வேண்டும். மேற்கூறிய வண்ணம் நிற்கும் சீவன்முத்தர்கள் சிவனடியார்களையும் ஞானாசிரியரையும் போற்றி மதிக்க வேண்டும். இறுதியாக, ஆலயவழிபாட்டு நெறி பற்றிக் கட்டுரை கூறுகிறது. ஆலயங்களை இறைவனின் திருமேனியாகவும் அவன் குடிகொள்ளும் இடங்களாகவும் போற்றித் தலயாத்திரையும் பூசனையும் செய்து சீவன்முத்தர்கள் சிவப்பேற்றினைப் பெறுகின்றனர். இவ்வாய்வுக்கட்டுரை, சுந்தரர் தேவாரத்தில் காணப்படும் சிவநெறிகளை அடையாளங் கண்டு கூறும் முதல் ஆய்வுக்கட்டுரையாகும்.

***கருச்சொற்கள்***: *சுந்தரர் தேவாரம், சிவநெறி, சீவன்முத்தர், சைவசித்தாந்தம், சாதனையியல்*

**Abstract**: The main objective of this research article is to identify and write the disciplines of *civaṉeri* in Cuntarar Tēvāram. The article is designed in a qualitative approach using the method of text analysis. The analysis is based on the tenets of *Saiva Siddhāntam*. The *Saiva Siddhāntam's cātaṉaiyiyal* says that the liberated souls remain on earth for some time as *jīvaṉmuktās*. Cuntaramūrti Swamikal is one who had attained liberation to walk around as a *jīvaṉmuktā*. Hence, his hymns outpour verses of *civaṉeri* disciplines. These are analysed and synthesised into eight subheadings in this article. The first of the *civaṉeri* disciplines mentioned, is wisdom. Wisdom is obtained in two ways. It can be obtained by the Lord's revelation from within and through the understanding of the *āgamās*. *Jīvanmuktās* attain the bliss of wisdom by listening and contemplating on the revelations of Lord Civā who comes as a sage to such souls. The next component is love that should be showered on all lives. As the Lord is the embodiment of Love, it is emphasized that the soul that is immersed in the Lord must also exhibit that love. The activities of love towards the Lord become *bhakti*. Through *cariyai, kiriyai* and *yōgam*, the bhaktā should wear the *tiruṉīṟu* and *rudrāksha,* chant the five-letter mantra, sing the *Tirumuṟais,* listen to the *Meykaṇṭa Shāstrās* and meditate on Civā. He should abstain from toddy and meat, and refrain from lust, anger and dishonesty. *Jīvaṉmuktās* should respect and praise the civaservitors and the civaguru. Finally, the article touches on temple discipline. The Civā temples are regarded as the Lord's manifestation and His dwelling place, and thus the *jīvaṉmuktās* pilgrimage to these temples to worship and attain bliss. The research claims to be the first such article regarding the discipline of *civaṉeri* in Cuntarar Tēvāram.

***Keywords****: Cuntarar Tēvāram, civaṉeri, jīvaṉmuktā, Saiva Siddhāntam*, *cātaṉaiyiyal*

## அறிமுகம்

உயிர்கள் கட்டுநிலையிலிருந்து விடுதலை பெறுவதற்கு நான்கு படிநிலைகளைச் சைவ சித்தாந்தம் கூறுகின்றது. சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் அப்படிநிலைகளைக் கடந்த உயிர், இறைவன் திருவடியை நோக்கிப் பயணிக்க, அது சீவன் முத்தர் நிலையை அடைகிறது. இவர்கள் உலகப்பற்று அற்றவர்களாயினும் அனைத்து உயிர்த் தொகுதிகளையும் படைப்புகளையும் இறைவனாகவே காணும் பெரும் பேற்றினைக் கைவரப் பெறுகின்றனர். இத்தகைய சீவன் முத்தர்களுக்காக மெய்கண்ட நூல்கள் நுவலும் சிவநெறி ஒழுக்கங்கள் சாதனையியலில் இடம் பெறுகின்றன. சிவனிடத்து இடையறா அன்பு செலுத்தி, அவனது ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சாடனம் செய்து,

சிவசின்னங்களைப் போற்றி அணிந்து கொள்வதுடன் சிவனடியார்களையும் ஞானகுருமார்களையும் ஆலயங்களையும் சிவனெனவே காணும் தன்மையைப் பெற்றவர்களே இச்சீவன் முத்தர்கள். இவர்களுள் தோழமைநெறி நின்றவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆவார். சுந்தரர் பாடிய பாடல்கள், திருப்பாட்டாகச் சைவத் திருமுறைகளுள் ஏழாம் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளன. அவர் பாடிய அத்திருப்பாட்டில் ஆங்காங்கே சைவ சித்தாந்தம் நுவலும் சிவநெறிகள் பொதிந்துள்ளன.

## ஆய்வு நோக்கம்

ஏழாம் திருமுறைத் திருப்பாட்டில் காணப்படும் சிவநெறிகளைப் பகுத்தாய்ந்து, அவற்றைச் சைவ சித்தாந்த நூல்கள் கூறும் சிவநெறி ஒழுக்கங்களோடு இணைத்து அனைவரும் விளங்கிக்கொள்ளும் வகையில் வழங்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முந்தைய ஆய்வுகள்

தேவாரம் பற்றியும் திருமுறைகள் பற்றியும் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் சைவசித்தாந்தக் கொள்கைகளை ஆராய்வனவாகவே அமைந்துள்ளன. அவ்வரிசையில் சில ஆய்வுகள் இங்குக் குறிக்கப்படுகின்றன. ‘திருவாசகத்தில் பசுக் கோட்பாடு’ என்னும் தலைப்பில் ஹகலியா சந்திரன் (2017) ஓர் ஆய்வினை மேற்கொண்டுள்ளார். இவ்வாய்வு சைவ சித்தாந்தத்தின் ஓர் உறுப்பான ஆன்மாவைப் பற்றியதாகும். எனினும், சிவநெறி ஒழுக்கங்கள் பற்றி அவ்வாய்வு எதனையும் வலியுறுத்தவில்லை.

அடுத்து, பூங்கொடி முருகையா (2017) ‘திருநாவுக்கரசர் தேவாரத்தில் பசுக் கோட்பாடு’ என்னும் தலைப்பில் ஓர் ஆய்வினைச் செய்துள்ளார். இதிலும் சிவநெறி பற்றி ஏதும் கூறப்படவில்லை. ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பா-திருப்பல்லாண்டு எனும் தொகுப்பில் காணப்படும் முப்பொருள் உண்மை பற்றி, சீதா இலட்சுமி ராதா கிருஷ்ணன் (2010) மேற்கொண்ட ஆய்விலும் சிவநெறி பற்றி ஏதும் விளக்கவில்லை. அவரது ஆய்வு, பதி, பசு, பாசம் பற்றிய சைவ சித்தாந்தக் கொள்கைகள் பற்றி விளக்குவதோடு நின்றுவிடுகின்றது.

கபீர்தாசன் (2004) எழுதிய ஆய்வு ‘சைவ இலக்கிய வளர்ச்சியில் சுந்தரரின் செந்தமிழ்’ எனும் தலைப்பில் அமைந்ததாகும். சுந்தரரின் மண்ணுலக வாழ்வும் அதை விடுத்து கைலாயம் சென்றதும் திருப்பாட்டில் மட்டுமல்லாது பெரிய புராணத்திலும் நிறையவே சொல்லப்பட்டுள்ளன. இவை ஏற்படுத்திய இலக்கிய பாணிகள் பிற்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றியுள்ளன என ஆய்வாளர் கண்டு தெளிந்துள்ளார். இவ்வாய்விலும் சுந்தரர் காட்டும் சிவநெறி பற்றிக் கூறப்படவில்லை.

‘சுந்தரர் வாழ்வியல் கோட்பாடுகள்’ எனும் தலைப்பில் மங்கையர்க்கரசி (2010) மேற்கொண்ட ஆய்வு, சுந்தரரின் பாடல்கள் பக்தி மட்டுமல்ல, அவை சமூகவியல் கொண்டவை என்ற கருதுகோளை ஆதாரங்களுடன் முன்வைத்துள்ளார். இருப்பினும், சிவநெறி பற்றி ஏதும் அவ்வாய்வு எடுத்துரைக்கவில்லை.

‘சுந்தரர் தேவாரத்தில் இலக்கிய இலக்கணச் செறிவு’ எனும் தலைப்பில் சொர்ணபிரபா (2011) மேற்கொண்ட ஆய்வு, சுந்தரர் தேவாரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதைத் தவிர வேறு ஒற்றுமையை இவ்வாய்வுடன் கொண்டிலது.

ஆய்வாளர் தங்கத்துறைச்சி (2018) ‘சுந்தரர் பாடல்களில் பக்திநெறி’ என்ற ஆய்வினை மேற்கொண்டுள்ளார். ஆய்வில் பத்திமையின் தன்மையை விளக்குவதோடு சுந்தரர் எவ்வெவ்வகைகளில் அதனை மேற்கொண்டுள்ளார் என்றும் விளக்கியுள்ளார். சுந்தரர் தேவாரத்தில் பத்திமை என்ற நிலையில் ஓர் ஒற்றுமை காணப்பட்டாலும் அதில் சிவநெறி ஒழுக்கங்கள் காணப்படவில்லை என்ற வகையில் அது இவ்வாய்வுக்குப் புறம்பாகிறது. கிடைத்த முந்தைய ஆய்வுகளின் வழி சுந்தரர் தேவாரத்தில் காணப்படும் இலக்கண இலக்கியக் கூறுகளும் சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள் உண்மைகளும் சுந்தரரின் பத்திமைத் திறனும் அறியப்படுகின்றன. அவற்றை வைத்துப் பார்க்கையில், அவற்றுள் எதுவும் சுந்தரர் காட்டும் சிவநெறி ஒழுக்கங்கள் பற்றிச் சிறப்பாக எடுத்து இயம்பவில்லை. அக்குறையை இக்கட்டுரை நிறைவு செய்யும்.

## ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வு, பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. மூலத்தரவுகளைச் சேகரிக்க, தருமை ஆதீன வெளியீடான சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தின் அனைத்துப் பாடல்களும் பகுப்பாய்வுச் செய்யப்பட்டு, அவற்றுள் காணப்படும் சிவநெறி ஒழுக்கங்கள் சேகரிக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டன. இதற்கு அடிப்படையாகச் சைவ சித்தாந்தச் சாத்திர நூல்களான சிவஞான போதமும் சித்தியாரும் பிறவும் கூறும் சாதனையியலுக்கான சிவநெறிமுறைகள் கட்டமைப்பாகப் பயன்படுத்தப்பட்டன.

## ஆய்வுத் தரவுகள் பகுப்பாய்வு

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில் உள்ள 1026 பாடல்களையும் ஆராய்ந்ததில் பெறப்பட்ட ஆய்வுத் தரவுகள் எட்டுக் கருப்பொருள்களாகப் பிரிக்கப்பட்டன. இக்கருப்பொருள்கள் மெய்கண்டநூல்கள் கூறும் சாதனையியலில் சொல்லப்பட்ட சிவநெறி ஒழுக்கங்களே ஆகும். இக்கருப்பொருள்களையே - ஞானம் பெறுதல், அன்பு செலுத்துதல், பத்திமை, சிவசின்னங்கள் அணிதல், ஐந்தெழுத்து மந்திரம், சிவனடியார்களைப் போற்றுதல், ஞானாசிரியரை மதித்தல், ஆலய வழிபாடு என்பனவற்றைத் – துணைத் தலைப்புகளாகக் கொண்டு இவ்வாய்வுக்கட்டுரை வரையப்பட்டுள்ளது. தலைப்புகள் ஒட்டிய கருத்துகளும் அவை தொடர்பான சுந்தரரின் பாடல்களும் பின்வருமாறு தரப்படுகின்றன.

## ஞானம் பெறுதல்

கடவுளை உணர்ந்து கொள்வதற்கான வழிமுறைகளாக மெய்கண்ட சாத்திரங்கள் இரண்டு வகை ஞானங்களைக் குறிப்பிடுகின்றன. ஒன்று, இறை அருளால் பெறப்படுவது; மற்றது ஆகம நூல்களின் வழிக் கற்றறிவது. முந்தையது, இறைவனிடமிருந்து நேரடியாக முதிர்ச்சியடைந்த ஆன்மாக்கள் பெறுவது ஆகும். இத்தகைய ஞானம் பெற்றவர்களே மூவர் முதலிகளும் காரைகாலம்மையாரும் பிற அருளாளர்களும் ஆவர். சைவ ஆகமங்களையும்

திருமுறைகளையும் நுண்ணிதின் ஆராய்ந்து ஞானம் பெற்றவர்கள் சந்தானக் குரவர்கள் முதலியோர் ஆவர் (கந்தசாமி, 1997).

இறைவனைக் 'காணுமாறு காணல்' என மாணிக்கவாசக சுவாமிகள் பாடுகின்றார். இறைவன் கண்டு காட்டினால் மட்டுமே உயிர்கள் காணமுடியும் என்பதே இதன் கருத்து. சிவஞான போதம் இதனையே 'காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல் / காண உள்ளத்தைக் கண்டு காட்டலின் / அயரா அன்பின் அரன்கழல் செலுமே' - (சிவஞானபோதம்: 11) என்றவாறு கூறுகின்றது. ஒரு பொருளைக் கண் காண்பதற்கு உயிர் உதவுவது போலவே, உயிர் கண்டு அறிவதற்கு இறைவன் உள்நின்று உணர்த்துகின்றான் (நல்லசாமிப்பிள்ளை,1984). இறைவனிடத்துத் தணியா மோகம் கொள்வதனால் சிவராகமோ சிவகாமமோ வேட்கைகொண்ட உயிர்களிடம் ஏற்பட்டு அவ்வுயிர்கள் சிவானந்தம் அடையும் (கந்தசாமி, 1997).

சிவானந்தம் பெற விழையும் உயிர் நான்கு வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனச் சிவப்பிரகாசம் (சி.பி.: 83) கூறுகிறது. முற்பிறப்புகளில் பெறப்பட்ட புண்ணியங்களின் பலனாக இறைவனே ஞானாசிரியனாக வந்து உபதேசிக்கும் சொற்களைக் கூர்ந்து செவிமடுக்க வேண்டும்; பின் அதனைச் சிந்திக்க வேண்டும்; சிந்தித்ததை ஐயம் தெளிய வேண்டும்; இறுதியாக உண்மையை உணர்ந்து சிவானந்தப் பேற்றில் நிற்க வேண்டும் (சுப்பிரமணிய பிள்ளை, 1945).

இறைவன் திருவடிபேறு விழையும் உயிர்கள் மேற்கூறிய நான்கு வழிமுறைகளைப் பின்பற்றவேண்டும் எனச் சைவ சித்தாந்தம் பரிந்துரைத்த போதிலும், இவை அனைத்தும் முந்திய பிறப்புகளில் இவ்வழிகளைச் செய்துவிட்ட ஆன்மாக்களுக்குப் பொருந்துவதில்லை. அத்தகையோர் அவர்கள் ஆற்றிய முன்வினைகளுக்கு ஏற்பப் பயனை அறுவடை செய்யவே இப்பிறப்பு எய்துகின்றனர். அத்தகையோர் சடங்குகளையும் விதிகளையும் பின்பற்றாமலேயே சீவன் முத்தர்களாகின்றனர். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் முற்பிறவிப் பயனாலேயே இப்பிறப்பில் திருவெண்ணெய் நல்லூரில் ஆட்கொள்ளப்படுகின்றார்.

## அன்பு செலுத்துதல்

இறைவனிடம் கொண்ட மேலிட்ட அன்பினால் மட்டுமே முத்திப்பேற்றினை அடைய முடியும். இறைவனிடத்துச் செலுத்தப்படும் அன்பு மண்ணுலகில் மாந்தர்கள் செலுத்தும் பிறவுயிர்களிடத்துச் செலுத்தும் பரிவோ பாசமோ அன்று; காமத்தின் விளைவும் அன்று. எவ்வகைப் பற்றுமின்றித் தன்னை முழுமையாக இறைவனிடத்து ஒப்படைத்து, அவனைச் சிந்தையில் முற்றிலும் நிறுத்தி, அவனுருவைத் தன்னுருவாக எண்ணிச் செய்யும் செயலெல்லாம் அவன் செயலாகவே கொண்டு வாழும் பித்தர்கள் காட்டும் அன்பே இங்குக் கூறப்படும் அன்பாகும் (ரங்கசாமி, 1958).

சுந்தரரும் மீண்டுமீண்டும் சிவனின் அன்பை வேண்டி நெக்குருகிப் பாடுகின்றார். சிவனை மட்டுமே சிந்தையில் கொண்டார் என்பதற்கு அவர் பாடல்களுள் ஒன்று: -

கீளார் கோவணமுந் திருநீறுமெய் பூசியுன்றன்
தாளே வந்தடைந்தேன் தலைவாயெனை ஏன்றுகொள்நீ
வாளார் கண்ணிபங்கா மழபாடியுள் மாணிக்கமே
கேளா நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே - (7.24.2)

சடங்குகளையும் விதிகளையும் சுந்தரர் பின்பற்றவில்லை என்பதற்கு, ‘இத்தனை யாமாற்றை அறிந்திலேன் எம்பெருமான்’ (7.29.1) எனப் பாடுகின்றார். முன்பிறவியின் பயனாகவே சிவனடியார் ஆனதை இவ்வாறு கூறுகின்றார்: - ‘மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப் பாத மேமனம் பாவித்தேன், பெற்ற லும்பிறந் தேனி னிப்பிறவாத தன்மைவந் தெய்தினேன் (7.29.1)’. ஆகவே இறைவன் பால் தீரா அன்பு செலுத்துவது சிவநெறிகளுள் ஒன்றாகின்றது.

## பத்திமை

சிவனடியாராகத் தீட்சை பெற்றவர்கள் சிவச்சின்னங்களை அணிந்துகொள்வதுடன் ஐந்தெழுத்தை நாத்தழும்பேற எப்போதும் உச்சரித்துத் திருமுறைகளைப் பாடி மெய்கண்ட சாத்திரங்களைச் செவிமடுத்துச் சிவபூசைகளைச் செய்து சிவனை மனமொழிமெய்களால் தியானிக்க வேண்டும். அனைத்து உயிரிடத்தும் அன்பு செலுத்துவதோடு அவற்றின் நலவாழ்வுக்குத் தொண்டாற்றவும் வேண்டும் எனச் சித்தாந்தம் கூறுகிறது. மேலும், கள்ளுண்ணாமையையும் ஊனுண்ணாமையையும் கடைப்பிடித்து முக்குற்றங்களான காமம், கோபம், பொய்மை ஆகியவற்றிலிருந்து நீங்கியிருத்தல் வேண்டும் (வச்சிரவேல் முதலியார், 1960).

உயிர்களின் பொருட்டு இறைவன் எளிவருகிறான் எனச் சாத்திரங்கள் உரைக்கின்றன. உள்நின்று உணர்த்தும் அவன், சீவன்முத்தர்களுக்கு

அகக்காட்சி அளிக்கிறான். புறவழிபாட்டிற்கென அவன் சிவனடியாராகவும் குருமாராகவும் சிவலிங்கமாகவும் உருவத் திருமேனிகளாகவும் காட்சி தருகிறான். இதன் விளைவாக ஆலய வழிபாடும், குருலிங்கசங்கம வழிபாடும் தோன்றியுள்ளன. இதனை வலியுறுத்தும் வகையில் சிவஞானபோதம் அதன் பன்னிரண்டாவது சூத்திரத்தில் '... அன்பரொடு மரீஇ/ மாலற நேயம் மலிந்தவர் வேடமும்/ ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே.' என்று உரைக்கின்றது.

இறைவனிடத்துப் பத்திமையை யோகத்தாலோ ஞானத்தாலோ உள்ளத்தேயும் சரியை கிரியை வழியாகப் புறத்தேயும் செலுத்தலாம். புற வழிபாடு பற்றிச் சித்தியார் (சி.சி.சு:302) கூறுவதையும் நோக்கலாம். ஒருமையுடன் பூக்கைக் கொண்டு அவனன்றி ஓர் அணுவும் அசையாது எனத் திடச் சித்தமுடன் ஒருவன் புறவழிபாட்டை நிகழ்த்துவானேயானால் அவனும் உயர்ந்த பத்திமை செய்தவனாவான்.

சிறந்த பத்திமையைச் சுந்தரர் பல்வேறு இடங்களில் பாடுகின்றார். மனம் போன போக்கில் பாவையர் பின் செல்லாது இறைவன் பால் தூய அடியவனாக இருந்தால் காலதேவனும் நன்னார் எனும் கருத்தோடு, 'வாளோடிய தடங்கண்ணியர் வலையிலழுந் தாதே, நாளோடிய நமனார்தமர் நனுகாமுனம் நணுகி ஆளாயுய்ம்மின்' (7.78.5). சிவனிடம் பத்தி கொண்டால் மட்டுமே ஆணவத் தளையிலிருந்து விடுபடலாம் எனக் கூற வந்த சுந்தரர், 'பற்றரைப் பற்றிநின்று பழிபாவங்கள் தீர்மின்களே' (7.22.9) (செங்கல்வராய பிள்ளை, 1962).

பிறருக்கு ஒன்று ஈயாது தொண்டுநலம் பாராட்டாது முக்குற்றங்களுடன் வாழ்வோரைச் சுந்தரர் கடிந்துரைக்கிறார். பொய்மையாளர்களைத் தொண்டரெனக் கூறக்கூடாது என்று அவருக்கே உரித்தான பாணியில் கூறுகிறார்: 'தாழ்வெனுந் தன்மை விட்டுத் தனத்தையே மனத்தில் வைத்து / வாழ்வதே கருதித் தொண்டர் மறுமைக்கொன் றீய கில்லார் / ஆழ்குழிப் பட்ட போது வலக்கணில் ஒருவர்க் காவர்' (7.8.7).

பொய்மை அகற்றிச் சிவனை உள்ளத்தில் பற்றி நிற்பவர்களுக்கு அவன் அமுதம் போல்வான் – 'ஆகமுறப் பாவக மின்றிமெய்யே பற்று மவர்க்கமுதை' (7.84.7); மாறாக இருப்பவர்களுக்கு 'ஏதி லார்தமக் கேதிலன் றன்னை' (7.56.2); சிவன் தன் அன்பர்களின் போற்றுதல்களைப் பெரிதும் உவப்பவன், 'உரைப்பார் உரையுகந் துள்கவல் லார்தங்கள் உச்சியாய்' (7.92.4). ஆகையால் சிவனை மனமுருகி இறங்கிப் பாட வேண்டும். சுந்தரர், 'இறங்கிச் சென்று தொழுமின்

இன்னிசை பாடியே பிறங்கு கொன்றைச் சடையன் எங்கள் பிரானிடம்' (7.81.2) எனச் சொல்கிறார்.

பாடும் அடியார்கள் யாரைப் பாடவேண்டும் என்பதையும் சுந்தரர் தெளிவாகவே கூறுகிறார். மனிதர்களைப் புகழ்ந்தும் வாழ்த்தியும் பாடினாலும் கிடைப்பது ஏதுமில்லை; மாறாக, இறைவனைப் பாடிப் பணிந்தால் சிவலோகப் பதமே கிடைக்கும் (7.34.1) என்கிறார்.

சிவனை இராப்பகல் எனப் பார்க்காது எப்போதும் பாடவேண்டும்; அவன் திருவடியை நெஞ்சில் பதிக்கவேண்டும். 'பரவிநாடொறும் பாடுவார்வினை பற்றறுக்கும்பைஞ் ஞீலியீர்' (7.36.6); 'இரவும் எல்லியும் பகலும் ஏத்துவார்' (7.75.8); 'பிரியாத அன்பராய்ச் சென்றுமுன் அடிவீழுஞ் சிந்தை யாரை' (7.90.3). இவ்வாறெல்லாம் வழிபட்டால் அறியாமை எனும் இருள் நீங்கும் எனக் கூறும் சுந்தரர், 'வெளிறு தீரத் தொழுமின்' (7.81.4), 'பிழைகள் தீரத் தொழுமின்' (7.81.9), 'எல்லியும் பகலும் பணியது செய்வேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே' (7.69.7) என்றும் அறிவுரை வழங்குகிறார்.

இறைவனைச் சாராதாரைச் சுந்தரர் வெறுக்கின்றார். அத்தகையோரின் அறிவும் நினைப்பும் எத்தகையன எனக் கண்டிக்கின்றார். 'சடையிற்கங்கை தரித்தானைச் சாராதார் சார்பென்னே.' (7.86.1); 'ஐயன்எங் கள்பிரானை அறியாதார் அறிவென்னே' (7.86.7); 'நெஞ்சத்தெங் கள்பிரானை நினையாதார் நினைவென்னே.' (7.86.8) எனப் பாடியுள்ளார். ஆகவே, இறைவனைச் சார்ந்து, அவன் நினைப்பாகவே எப்போதும் இருந்து பத்திமை செய்ய வேண்டும் என்பதையே சுந்தரர் வலியுறுத்துகிறார்.

## சிவசின்னங்கள் அணிதல்

சிவசின்னங்களுள் தலையானவை திருநீறும் உருத்திராக்கமும் ஆகும். இம்மைக்குச் செல்வமும் மேனிக்கு ஒளியும் வழங்கவல்லது திருநீறு எனும் நம்பிக்கையைச் சைவர்கள் கொண்டுள்ளனர். திருநீற்றின் பெருமைதன்னைத் திருஞானசம்பந்தர் ஒரு பதிகமாகவே பாடியுள்ளார். 'மந்திரமாவது நீறு' எனத் தொடங்கும் இத்திருநீற்றுப் பதிகம் இரண்டாம் திருமுறையில் இடம்பெறுகிறது. திருநீறு (வச்சிரவேல் முதலியார், 1960).

சிவபிரானின் கண்ணீர்த் துளிதான் உருத்திராக்கம் ஆனது என்பது புராணச் செய்தி ஆகும். அத்தகைய உருத்திராக்கத்தைத் தனி மணியாகவோ

மாலையாகவோ சிவனடியார்கள் அணிந்து கொள்கின்றனர். அவ்வாறு அணிவதால் அணிபவரின் மலக்கட்டுகள் அகல உதவுகிறது. இருப்பினும், அத்தகைய நன்மைகளைப் பெறுவதற்குச் சில சடங்குகளையும் சரியான தீட்சையையும் ஏற்க வேண்டும் (வச்சிரவேல் முதலியார், 1960).

சிவன் தன் திருமேனி முழுதும் திருநீற்றால் அலங்கரித்துக் கொள்கிறான். இது அவனது வெள்ளைப் புனித வடிவத்தில் முத்துக்களாக தோன்றுகிறது. அவருடைய பத்தர்களும் திருநீற்றை அணிந்துகொள்கிறார்கள்; அவர்களுடைய நெஞ்சங்களில் சிவபெருமான் வாழ்கிறான். இக்கருத்தினை ஒட்டி சுந்தரர் பின்வருமாறு எல்லாம் பாடியுள்ளார்: -

'செம்பொன் மேனிவெண் ணீறணி வானை' (7.68.1);

'நீற்றாரும் மேனியராய் நினைவார்தம் உள்ளத்தே நிறைந்து தோன்றுங் காற்றானைத்
தீயானைக் கதிரானை மதியானை' (7.30.2);

'நீறு தாங்கிய திருநுத லானை நெற்றிக் கண்ணனை' (7.64.1);

'பொடியேறு திருமேனிப் பெருமானை' (7.30.5);

'முத்து நீற்றுப் பவள மேனிச் செஞ்சடை யான்' (7.7.11);

'மெய்யெலாம்பொடிக் கொண்டுபூசுதிர்' (7.36.10).

ஆகையால் சைவர்கள் பின்பற்றவேண்டிய சிவநெறிகளுள் திருநீற்றையும் உருத்திராக்கத்தையும் அணிந்து கொள்வது இன்றியமையாதன ஆகின்றது.

## ஐந்தெழுத்து மந்திரம்

முத்தியை அடைவதற்கான முன்நிபந்தனைகளில் ஒன்றாக, ஆன்மா ஐந்தெழுத்து மந்திரத்தைப் பற்றிச் சிந்தித்து, தன்னைத் தானே தூய்மையாக்கிக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யின் மலப்பிணிப்புகள் நீங்கி இறுதி ஆனந்தத்தை அனுபவிக்க ஏதுவாகிறது. இதற்கான அடிப்படை காரணம், இம்மந்திரம் சிவனுடைய திருவுருவங்களில் ஒன்றாகும் (நல்லசாமி பிள்ளை, 1948).

எந்தவொரு பொழுதிலும் புனிதமான ஐந்தெழுத்தை ஒரு சிறந்த சைவன் உச்சரித்த வண்ணமே இருப்பான். சிவன் அத்தகைய பத்தனிடம் குடிகொள்கிறான். இதற்கு சான்றாகச் சித்தியார் கூறுவது யாதெனில், பசு

ஞானத்தால் சிவனை அறிய இயலாது. பதி ஞானம் கைவரப் படாத ஆன்மாவின் மனத்தில் போதிய அன்பின்மையால் அவனது திருவடிகளை அடையமுடியாது. இருப்பினும், இவ்வுலகையும் படைப்பையும் ஒரு மாயையாக எண்ணி அதனிடத்துப் பற்று நீங்கி, இறைவன் திருநாமத்தை விதிப்படித் தியானித்து இருக்கும் ஒரு பத்தனின் இருள் விரட்டப்பட்டு அவன் மனத்திற்குள் இறைவன் தானே வந்து குடி கொள்வான் (நல்லசாமி பிள்ளை, 1948).

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தம் முன்னோர்களான திருஞானசம்பந்தரையும் திருநாவுக்கரசரையும் அடியொற்றி ஐந்தெழுத்து மேன்மை பற்றி, திருப்பாண்டிக்கொடுமுடிக் கோயிலில் ஒரு முழுப்பதிகம் பாடியுள்ளார். 'மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப் பாத மேமனம் பாவித்தேன்' (7.48.1) எனத் தொடங்கும் இப்பதிகத்தின் ஈற்றடிகளில், 'உனை நான்ம றக்கினுஞ் சொல்லும் நாநமச்சி வாயவே' என முடிக்கின்றார். இரண்டாம் பாடலில், 'இட்ட னும்மடி யேத்து வார்இகழ்ந் திட்ட நாள்மறந் திட்டநாள்' (7.48.2) என, நாமத்தைக் கூறாத நாள் அது நாளற்ற ஒன்றாகும் என்று வலியுறுத்துகிறார். ஐந்தெழுத்தை எப்போது எப்படிக் கூறவேண்டும் என்பதற்குப் பதிலாக, 'அந்தியும் நண்பகலும் அஞ்சுப தஞ்சொல்லி முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன் சிந்தை பராமரியா' (7.83.1) என இவ்வரிகள் அமைகின்றன.

## ஞானாசிரியரை மதித்தல்

ஞானாசிரியரை இறைவனின் அம்சமாகவே கொள்வது வழிவழியாக வந்த சைவக் கோட்பாடாகும். மேலும், முதிர்ச்சி அடைந்த ஆன்மாக்களுக்கு இறைவனே ஞானாசிரியனாக எளிவந்து அருள்புரிகிறான் எனச் சைவர்கள் நம்புகின்றனர். இவ்வகை ஞானாசிரியர்களைச் சைவவுலகு ஞானிகளாகக் கொண்டு பிற அடியார்களுக்கு ஞானதீட்சை வழங்கும் அதிகாரத்தை அவர்களுக்கு வழங்குகிறது. ஞானிகளின் வாயிலாகவே சிவனடியார்கள் சீவன்முத்தர்களாகின்றனர். எங்கும் நிறைந்த சிவன் எல்லா ஞானிகளுக்கும் முதல்வானாயும் மூலனாயும் அமைகின்றான். அவனே ஆலமர்க் கடவுளாக யோக வடிவில அமர்ந்து சனாதி முனிவர்களுக்கு வேதத்தையும் ஆகமத்தையும் போதித்தான் (அருணாசலம், 2000).

சைவ நடைமுறைப்படி இறைவனை வழிபடுவது போலவே ஞானாசிரியர்களையும் முறைப்படி வணங்கவேண்டும். சீடர்களிடம் உள்ள இருள் மலத்தையும் அறியாமையையும் களையும் ஞானாசிரியர், கண்ணெதிரில் காணப்படும் இறைவனுக்கு ஒப்பானவர். ஆகவே, அடியார்கள்

உய்திபெற நல்லதொரு ஞானாசிரியரைத் தேடி அடைகிறார்கள் (கணேசலிங்கம், 2001).

முதிர்ச்சியடைந்த ஆன்மாக்களுக்கு இறைவனின் பெருங்கருணையினால் ஞானாசிரியர்கள் கிடைக்கப்பெறுகின்றனர். ஒருவன், தன் முயற்சியாலும் யோகப் பயிற்சியினாலும், மந்திரங்கள், மருத்துவம், மூலிகைகள், குளிகைகள், திரிகால உணர்வு, வேதம், சாத்திரம் முதலியவற்றைக் கற்றுத் தேறலாம். ஆயினும், இறைவனை அடைவதற்கு ஒரு ஞானாசிரியனே வழிகாட்டமுடியும். மேலும், அவ்வாசிரியனே மேற்கூறப்பட்ட எல்லா நூலறிவையும் தரவல்லவன் எனச் சிவஞான சித்தியார் கூறுகின்றது (நல்லசாமி பிள்ளை, 1948).

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இதே கருத்துடையவர். சிவனே தனக்கு ஞானாசிரியனாக வந்ததை, 'கல்லால் நிழற்கீழ் ஒருநாட்கண் டதும்' (7.2.5), 'வந்து நம்மோ டுள்ள ளாவி வான நெறிகாட்டுஞ் / சிந்தை யீரே நெஞ்சி னீரே திகழ்மதி யஞ்சூடும் எந்தை' (7.7.9) 'குறியே என்னுடைய குருவே' (7.26.4), மேவியவெந் நரகத்தில் அழுந்தாமை நமக்கு மெய்ந்நெறியைத் தான்காட்டும் வேதமுத லானை' (7.40.10), 'திருத்தித் திருத்தி வந்தென் சிந்தை இடங்கொள் கயிலாயா' (7.47.8) எனப் போற்றி வேண்டி ஞானாசிரியனின் மேன்மையையும் அவரை வேண்டி நிற்க வேண்டிய நம் கடமையையும் அழகாக எடுத்துரைக்கின்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## சிவனடியார்களைப் போற்றுதல்

சங்கமம் எனும் சொல் சிவனடியார்களின் குழுமத்தைக் குறிக்கும். இறைவனையும் ஞானாசிரியர்களையும் வழிபடுவது போலவே இப்புனிதர்களும் வணக்கத்துக்கு உரியவர்களே. இச்சங்கமத்துள்ளோர் எல்லாக் காலமும் சிவனையே சிந்தையில் இருத்துபவர்கள். இவர்களை வழிபடுவதோடும் கூடியிருப்பதாலும் சிவச்சிந்தனை மனத்தினிலிருந்து அகலாது. சிவனடியார்களின் தோற்றம் ஒன்றே சிவனை நினைவுறுத்துவதாகும். இதனையே 'சிவஞானபோதம்' 'மாலற நேயம் மலிந்தவர் வேடமும் .. அரனெனத் தொழுமே' எனக் கூறுகிறது (கணேசலிங்கம், 2001).

சிவனடியார்கள்பால் அன்பு செலுத்துவது பற்றி, சித்தியார் சுபக்கம் பாடல் 323 இவ்வாறு கூறுகிறது: 'சிவனடியார்களை வணங்காதவர்கள் சிவனை

வழிபட்டவர்கள் ஆகார்; அத்தகையோர் பிறரையும் நேசியார், தன்னையும் நேசியார். உண்மைச் சிவனடியார்களை அடைமின், அவர்களின் விருப்பங்களை ஆணைகளாகக் கொள்மின், பணிவாகப் பேசுமின், நேர்வழியில் செல்மின், அவர்களைப் பணிந்து வணங்கி அவர்களுடன் ஆடிப்பாடுங்காள்' (நல்லசாமிப்பிள்ளை, 1948).

இச்சிவனடியார்களை எங்குக் காண்பது எனும் கேள்விக்குப் பதிலாகச் சுந்தரர் தேவாரம் விடை கூறுகின்றது. இவர்களைச் சிவாலயங்களிலும் ஆசிரமங்களிலும் காணப்பெறலாம். அப்பொழுது, 'கூடிக் கூடித் தொண்டர் தங்கள் கொண்ட பாணி குறைப டாமே ஆடிப் பாடி அழுது நெக்கங் கன்பு டையவர்' (7.5.5) ஆகிய இவர்களை மகிழலாம். அவ்வேளையில், 'ஆடுமின் அன்புடையீர் அடிக்காட்பட்ட தூளிகொண்டு / சூடுமின் தொண்டருள்ளீர் உமரோடெமர் சூழவந்து / வாடுமிவ் வாழ்க்கைதன்னை வருந்தாமல் திருந்தச்சென்று / பாடுமின் பத்தருள்ளீர் பழமண்ணிப் படிக்கரையே' (7.22.3). சிவனடியார்கள், 'இகழா துமக்காட் பட்டோர்' (7.77.4) எனச் சிவனை நோக்கிப் பாடுகின்றார். பிறவாமை வேண்டி நிற்கும் சுந்தரர், 'அடியார்க்குத் தொண்டுபட்டுக் கேட்டேன் கேட்பதெல்லாம் பிறவாமை கேட்டொழிந்தேன்' (7.21.2) என்கிறார். சிவனடியார்களைச் சாராதவர்களைக் கண்டிப்பது போல், அவர் கூறுவது, 'சார்ந்தவர் தம்மடிச் சாரேன்' (7.73.7) என்றார்.

சுந்தரர் அதோடு அமைதிபெறவில்லை. அவர்களைப் போற்றிப் பாட ஒரு முழுப் பதிகத்தையே அவர்களின் சிறப்பொடு வரலாற்றையும் கூறி சைவவுலகிற்கு அரும்பெரும் கொடையைத் தந்தார். திருத்தொண்டத்தொகையாக அறுபது சிவனடியார்களைப் பாடினார். ஆக, சிவனடியார்களை மதித்துப் போற்றுவது சிவநெறிகளுள் ஒன்றாகின்றது.

## ஆலய வழிபாடு

ஆலய வழிபாடு சைவத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும். தமிழ்நாட்டில் எண்ணற்ற பெருஞ்சைவக் கோயில் அமைப்புகளைக் காணமுடிகிறது. அதுமட்டுமல்லாது 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' எனும் முதுமொழிக்கு ஒப்பத் திரும்பும் திசையெல்லாம் சிறிய கோயில்கள் உள்ளன. ஆகவேதான், தமிழர்களைக் கோயில் கட்டும் இனமாகக் கருதுகிறார்கள் (கந்தசாமி, 2003).

ஆலய யாத்திரை சைவ நெறிகளுள் ஒன்றாகும். மூவர் முதலிகளும் இதர அருளாளர்களும் ஒவ்வொரு சிவாலயங்களுக்கும் சென்று தரிசனம் கண்டு பாமாலை புனைந்துள்ளனர். மூவர் முதலிகள் பாடிய தலங்களைப் பாடல்பெற்ற தலங்களாகக் கொள்கின்றனர். அவ்வகையில் சுந்தரர் பாடிய தலங்கள் 84 ஆகும் (கந்தசாமி, 2003).

ஆலயங்களில் குடிகொண்ட இறைவனை நாடாளும் மன்னனாகக் கொண்டு அவனுக்குச் சகல பணிவிடைகளையும் ஆடம்பர அலங்காரங்களும் செய்து கண்டு மகிழ்கின்றனர். ஆடல் பாடல் கலை இசைப் படைப்புகளை அவன் முன்னிலையில் நடத்தி இறைவனை மகிழ்விப்பதாகப் பத்தர்கள் எண்ணுகிறார்கள். கோயில் அர்ச்சகர்கள் அவனுக்கு ஆகமச் சடங்குகளையும் நிவேத்தியங்களையும் ஆறுகால பூசைகளையும் நடத்துகின்றனர். பத்தர்களும் இத்தகு ஆலயங்களில் கூடிக் குழுமுகின்றனர் (ரங்கசாமி, 1958).

திருத்தொண்டத்தொகையைத் தவிர்த்து ஏனைய எல்லாத் திருப்பாடல்களும் ஆலயத்து மூலவரை விளித்துப் பாடியன ஆகும். ஆலயம் சென்று சிவனை வழிபடுவது உண்மை நெறியாகும் என்றும் அதுவே தவமாகும் என்றும் திருச்சுழியல் ஆலயத்தில் பாடித் தொழுகிறார். ‘மலந்தாங்கிய பாசப்பிறப் பறுப்பீர்துறைக் கங்கைச் / சலந்தாங்கிய முடியான்அமர்ந் திடமாந்திருச் சுழியல் / நிலந்தாங்கிய மலராற்கொழும் புகையால்நினைந் தேத்துந் / தலந்தாங்கிய புகழாம்மிகு தவமாஞ்சது ராமே’ (7.82.6). அடுத்துத் திருக்கலயநல்லூரில் அடியார்களின் செயல்களையும் அங்கு நடைபெறும் சடங்குகளையும் குறிப்பிடுகின்றார். ‘சொற்பால பொருட்பால சுருதியொரு நான்குந் தோத்திரமும் பலசொல்லித் துதித்திறைதன் றிறத்தே / கற்பாருங் கேட்பாரு மாயெங்கும் நன்கார் கலைபயிலந் தணர்வாழுங் கலயநல்லூர் காணே’ (7.16.5) என்றும், ‘காலையிலும் மாலையிலுங் கடவுளடி பணிந்து கசிந்தமனத் தவர்பயிலுங் கலயநல்லூர்’ (7.16.8) என்றும் பாடுகிறார். கோயிலில் பத்தர்கள் செய்யும் செயல்களைக் கூறுகையில், ‘உங்கைக ளாற்கூப்பி உகந்தேத்தித் தொழுமின்தொண்டீர்’ (7.22.5) ‘காதல் செய்து களித்துப் பிதற்றிக் கடிமா மலரிட் டுனையேத்தி ஆதல் செய்யும் அடியார்’ (7.41.9) என ஆலய வழிபாட்டினை வலியுறுத்துகிறார்.

## முடிவுரை

இதுகாறும், சிவநெறி ஒழுக்கங்களாகச் சைவசித்தாந்தம் கூறுவனவற்றையும் அவை சுந்தரர் தேவாரத்தில் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன என்பனவற்றையும் கண்டோம். சிவநெறிகளுள் தலையாயது சிவஞானம் பெறுவதாகும். அதனையொட்டி, எல்லா உயிர்களிடத்தும் அன்பு பாராட்டி இறைவன்பால் பத்திமை செலுத்த வேண்டும். மேலும், சிவச்சின்னங்களை முறைப்படி அணிந்து நல்லதொரு ஞானாசிரியரை நாடி முதிர்ச்சிக்கேற்றத் தீட்சையினைப் பெறவேண்டும். அவ்வாறு தீட்சையளிக்கும் ஆசிரியரைச் சிவனெனவே கொண்டு, ஐந்தெழுத்து மந்திரத்தை நாத்தழும்பேற உச்சரித்து மலபரிபாகம் அடையவேண்டும். சிவனடியார்களுடன் சங்கமத்துக் கூடிக் குழாவி அவர்களை வணங்கிப் போற்றி ஆலயம் தோறும் யாத்திரை சென்று சிவநெறி ஒழுக்கங்களைச் சைவர்கள் கடைப்பிடிக்கவேண்டும் என இவ்வாய்வுக் கட்டுரை நிறைவெய்துகிறது.

## REFERENCES

Arunachalam, P. (1979). *Saiva Samayam (Ōr Arimugam)*. Nagarcoil: Dr.P.Arunachalam, 40-A, Vellalar Colony West Ramavarmapuram.

Ganesalingam, K. (2001). *An outline of saivism*. London, England: London Meykandar Atheenam.

Hagaliya, S. (2017). *Tiruvācakattil pacuk kōṭpāṭu*. (Unpublished master's thesis). Universiti Pendidikan Sultan Idris. Tanjung Malim, Malaysia.

Kabirthasan, K. (2004). *Caiva ilakkiya vaḷarcciyil Cuntarar centamiḻ*. (Unpublished doctoral dissertation). Tamil University. Tanjore, India.

Kandaswamy, S. N. (1997). *The concept of God in saiva siddhanta*. Thanjavur, India: Saiva Siddhanta Perumanram & Thanjai Tamil Sangam.

Kandaswamy, S. N. (2003). *Intiyat tattuvak kaḷañciyam* (2nd ed. Vol. III). Chidhamparam: Meyyappan Pathippakam.

Mangkayarkaraci, S. (2010). *Cuntararin vāḻviyal kōṭpāṭukaḷ*. (Unpublished doctoral dissertation). Annamalai University. Chithamparam, India.

Nallaswami Pillai, J. M. (1948). *Sivagnana siddhiyar supakkam of Arulnandhi Sivam*. Madras, S.India: Dharmapuram Adhinam.

Nallaswami Pillai, J. M. (1984). *Sivagnana botham of Meikanda Deva*. Madras: South India Saiva Siddhanta Works Pub. Society.

Natarajan, B. (1991). *Tirumantiram: A tamil scriptural classic* (B. Natarajan, Trans. N. Mahalingam Ed. 1st ed.). Madras, India: Sri Ramakrishna Math.

Poongkodi, M. (2017). *Tirunāvukkaracar tēvārattil pacuk kōtpāṭu*. (Unpublished master's thesis). Universiti Pendidikan Sultan Idris. Tanjung Malim, Malaysia.

Rangaswamy, D. M. A. (1958). *The religion and philosophy of tēvāram* (E. Sundaramoorthy Ed. 2nd ed.). Madras, India: University of Madras.

Rangaswamy, D. M. A. (1958). *The religion and philosophy of tēvāram* (E. Sundaramoorthy Ed. 2nd ed.). Madras, India: University of Madras.

Seeta Lechumi, R. K. (2010). *A study of saiva concepts depicted in the tiruvicaippa*. (Unpublished doctoral dissertation). University Malaya, . Kuala Lumpur, Malaysia.

Sengkalvaraya Pillai, V. S. (1962). *Thevaara olinerik katturai (Sundarar)*. Madras, India: The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnelvelly.

Sornapraba, R. (2011). *Cuntarar tēvārattil ilakkiya ilakkaṇac ceṟivu*. (Unpublished doctoral dissertation). Chennai University. Chennai, India.

Subramanya Pillai, K. (1945). *Sivaprakasam of Umapathy Sivam*. Chennai, India: Dharmapuram Adhinam.

Thangatturaichi, P. (2018). *Cuntarar pāṭalkaḷil pakti neṟi*. (Unpublished doctoral dissertation). Manonmaniam Suntharanar University. Tirunelveli, India.

Vacciravēl Mutaliyār, K. (1960). *Saivam*. Chennai: Government of Tamil Nadu Publications.